Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 2, 2021

வியாழக்கிழமை டிசெம்பர் 02, 2021 | ஒளி: 07 கதிர்: 168 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## த.மு.கூ அரசியல் கட்சி: மின்சூள் சின்னம்



ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# அடுப்புகள் வெடித்து சிதறுகின்றன

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் குமிழ்கள் வருகின்றமை, கசிவுகள் ஏற்படுகின்றமை மற்றும் எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறுகின்ற சம்பவங்கள், நாடளாவிய ரீதியில் நேற்றும் (01) இடம்பெற்றன.

அவற்றுடன் பொருத்தப்படும் குழாய்கள் வெடித்தல், ரெகுலேட்டர்கள் வெடித்துச் சிதறிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம், தலவாக்கலை, கொட்டகலை, புத்தளம், நானுஓயா, காலி, அம்பலாங்கொடை, தம்புள்ளை, ஹுணுகம, தங்காலை உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நேற்றும் பதிவாகியுள்ளன.

தலவாக்கலை, மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பைப் பற்ற வைத்த பின்பு, அதனை நிறுத்தி விட்டு, வெளியில் சென்ற ஒரு நொடியிலேயே, இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம், பாலாவி கரம்பை ஹூதா பள்ளி வீதியில் அல்ஹூதா பாலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் சமையல் அறையில் பயன்படுத்தப்படவிருந்த சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவால் அடுப்பு முழுமையாக வெடித்துச் சிதறியுள்ளது.

எனினும், இந்த வெடிப்புச் சம்பவத்தில் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



### வலி. கிழக்கு பிரதேச சபை

## உறுப்பினர் சடலமாக மீட்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் சிவபாலன், சாவகச்சேரி, தனங்களப்பு பகுதியில் உள்ள பண்ணை வீட்டில் இருந்து நேற்று (01) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சபுகஸ்கந்தையை விற்கவா பசில் இந்தியா சென்றுள்ளார்?

■ பா.நிரோஸ்



நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, இந்தியாவுக்குச் சென்றிருப்பது, தற்காலிகமாக மூடப்பட்டுள்ள சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்காகவா? என எதிர்க்கட்சி எம்.பி சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (01) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவைக் கேட்டுவிட்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், சமையல் எரிவாயு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து அந்த நிறுவனத்தை வேறு எவருக்காவது வழங்குவதற்கே தற்போது சமையல் எரிவாயு தொடர்பான பிரச்சினைகள் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2

## கடமை நேரத்தின் பின் கடமைக்குத் திரும்போம்

எட்டு மணித்தியால கடமை நேரத்தின் பின்னர் ஏற்படும் திடீர் மின்சார துண்டிப்பை வழமைக்கு திருப்பும் நடவடிக்கையிலிருந்து விலகுவதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு இதனை குறிப்பிட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போதிலும் மாலை 4.15க்குப் பின்னர் ஏற்படக்கூடிய திடீர் மின்சார துண்டிப்பை வழமைக்கு திருப்பும் நடவடிக்கை இன்று (நேற்று) வரை முன்னெடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

### 'ஒமிக்ரான' திரிபு ஆராய்வு

## மன்னாரில் பி.சி.ஆர் மாதிரிகள் சேகரிப்பு



■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

'ஒமிக்ரான்' திரிபு வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வட மாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சி.ஆர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு,

தொடர்ச்சி P2




## இந்தியாவில் நிதியமைச்சர்...

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, மக்களை மையமாகக் கொண்ட கூட்டுறவில் புதிய ஒத்துழைப்பின் வழிகளை ஆராய்கிறார்.

## டக்ளஸின் முயற்சியால் மக்களின் கைகளில் கிளிநொச்சி காணிகள்



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொருத்தமான காணிகள் அனைத்திலும் பிரதேச மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என கடற்றொழில் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தங்கத்தை அகழ முயன்ற உயர் அதிகாரி இடைநீக்கம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் யுத்தத்தின் போது புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை மீட்பதற்காக, இரகசியமான முறையில் அகழ்வு முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு அமைச்சுகளின் செயலாளர்களிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் தொடர்பில், பல்வேறான செய்திகள் வெளியாகியிருந்தன.

தொடர்ச்சி P2

## வெலிகம தீயில் சிறுமி மரணம்

வெலிகம, வேவேகெதரவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில், நேற்றுமுன்தினம் (30) இரவு ஏற்பட்ட தீயில் சிக்குண்டு, எட்டுவயதான சிறுமி மரணமடைந்துள்ளார்.

இத்தீயினால் வீட்டின் கூரைக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதுடன், மரணமடைந்தடை சிறுமியின் பாட்டி மற்றும் சிறுமியின் சகோதரி ஆகிய இருவரும் வீட்டை விட்டு வெளியே உயிர்த்தப்பியுள்ளனர். அத்துடன், அச்சிறுமியின் தாய் மற்றும் தந்தையை அயலவர்கள் காப்பாற்றியுள்ளனர். சிறுமியை மட்டும் காப்பாற்ற முடியாமற் போயுள்ளது.

தொடர்ச்சி P2

## மதமாற்றத்துக்கு எதிராக இளைஞர்கள் துணிந்து செயற்பட முன்வர வேண்டும்

■ டி.ஷங்கீதன்

வவுனியா கிழவன் குளம் பகுதியில் மதமாற்றக்காரர்களால் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட மார்க்கண்டு ஜெகதீஸ்வரனின் துணிச்சலையும் செயற்பாட்டையும் அதற்கு எதிராக செயற்பட்டதையும் பாராட்டுவதுடன் அவருக்குத் துணையாக என்றும் இருப்போமென வெள்ளவத்தை கங்காதீஸ்வர யாக பீடத்தின் தலைவர் சாமி கங்காதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாகவே இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மதமாற்றம் மிகவும் வேகமாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளில் இந்தச் செயற்பாடானது மிகவும் வேகமாக நடைபெறுகின்றது.

மக்களின் வறுமை நிலையை பயன்படுத்தி இந்தச் செயற்பாட்டை ஒரு குழுவினர் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டு வருகி

தொடர்ச்சி P2





### சிலிண்டர் கசிவு: அடுப்புகள் வெடித்தல்

## முடிவு எட்டப்படாது கூட்டம் முடிவுற்றது

■ பா.நிரோஸ்

சமையல் எரிவாயு சிலிண்டர் கசிவுகள் மற்றும் காஸ் அடுப்புகள் வெடிப்பு, அவற்றுக்குப் பொருத்தப்படும் குழாய்களில் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனை குழுவின் விசேட கூட்டத்தில் நேற்று (03) விரிவாக ஆராயப்பட்டபோதிலும், எவ்விதமான இறுதி முடிவுகளும் எட்டப்படாது கூட்டம் நிறைவடைந்தது.

தொடர்ச்சி P2




### மாதகல் காணி சுவீகரிப்பு விவகாரம்:

## நேற்றைய கூட்டம் இடம்பெறவில்லை

### வெளியிலிருந்து சென்றவர்கள் ஏமாற்றம்; ஆளுநர் அலுவலகம் முன்ஆர்ப்பாட்டம்

■ செந்துரன்பிரதீபன், எம்.றொசாந்த்

மாதகல் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளை, கடற்படைமுகாமுக்கு சுவீகரிக்க எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து,வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (01) மதியம் 1 மணியளவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## அதிபரின் தாக்குதலால் மாணவனின் செவிப்பறை பாதிப்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் முக்கிய கல்லூரியொன்றில் அதிபர் தாக்கியதில் க.பொ.த சாதாரண தரத்தில் பயிலும் மாணவர் ஒருவரின் ஒரு பக்கக் காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நட்டஈட்டுத் தொகையை ரூ.50 ஆயிரத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை

வீதி விபத்துகளில் உயிரிழப்போரின் குடும்பத்தார் மற்றும் பலத்த காயமடைந்தோருக்கு தற்போது வழங்கப்படும் நட்ட ஈட்டுத்தொகையை 50,000 ரூபாவால் அதிகரிக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, விபத்துகளில் உயிரிழப்போரின் குடும்பத்தாருக்கு இதுவரை வழங்கப்பட்ட 2 இலட்சம்

தொடர்ச்சி P2

# அடுப்புகள் வெடித்து சிதறுகின்றன

குறித்த சமையல் எரிவாயுவின் றெகுலேட்டர் மேல் பகுதியில் தீப்பிடித்த நிலையில் சமையலுக்கு பயன்படுத்தப்படும் கண்ணாடியில் தயாரிக்கப்பட்ட கேஸ் அடுப்பிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டதாக அந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற போது குறித்த உணவகத்தின் உரிமையாளர் மாத்திரமே இருந்துள்ளார்.

காலி-உடுகமை பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை (01) எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளது, இதனால், டீடில் இருந்த எந்தவொரு நபருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. வட்டுக்கோட்டை காளி கோவிலடியில் நேற்று (01) முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளை, சுன்னாகம் சுந்தரோடையில் உள்ள வீடு ஒன்றில் இதேபோன்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நுவரெலியா நானுஓயா நகரிலுள்ள மதுபானம் விற்பனை நிலையமொன்றின் சமையலறையில் பயன்படுத்தப்பட்ட காஸ் சிலிண்டர் நேற்று (01)) மதியம் வெடித்துள்ளது. றெகுலேட்டர் பகுதியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது, இந்த வெடிப்பு சம்பவத்தையடுத்து காஸ் சிலிண்டர் தரையில் விழுந்து உருண்டோடியுள்ளது.

காஸ் சிலிண்டர் கவிழ்ந்ததால் அதிலிருந்த எரிவாயு சுமார் 15 நிமிடங்களுக்குள் முழுமையாக வெளியேறியதாக மேற்படி நிலையத்தின் ஊழியர்கள் தெரிவித்தனர். காஸ் சிலிண்டரை அடுப்புடன் இணைக்கும் போதே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

## த.மு.கூ அரசியல்...

மின்சூள் "Torch Light" சின்னத்தில், அக்கூட்டணி அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. "

நமது கட்சிகள், ஒன்றுசேர வேண்டும் என்ற எமது மக்களின் பேரவாவுக்கு உயிர் கொடுத்து, முழு நாட்டுக்கும் இன்று நாம் முன்மாதிரியாக நிற்கிறோம்" என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டணியில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான, பழனி திகாம்பரம் மற்றும் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைப் பிரதித் தலைவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிபடாத இலங்கை என்ற ஒரே நாட்டு வரையறைக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை முன் வைத்தல், இதன் பிரதான அரசியல் கோரிக்கையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவு எட்டப்படாது...

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் பாராளுமன்றத்தில் நேற்று (01) இக்குழு கூடியது.

இதில், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, லிற்றோ, லாப்ஸ் எரிவாயு நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

சிலிண்டரில் வாயு கலவை அளவு மாற்றத்தினாலேயே இவ்வாறான வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறுவதாக கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலானவர்கள் கருத்துரைத்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் (30) மாத்திரம் நாடுமுழுவதிலும் 34 வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் சிலருக்கு காயம் ஏற்பட்டுள்ளதென பொலிஸார் இதன்போது சுட்டிக்காட்டினர்.

ஆகையால், இந்த விடயம் தொடர்பில் காலந்தாழ்த்தாது, உரிய நடவடிக்கை

> இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆய்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்தினார்.

தற்போது சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சிலிண்டர்களை மீள பெற வேண்டுமென சஜித் வலியுறுத்தினார். எனினும், சிலிண்டர்களில் பொருத்தப்படும் றெகுலேட்டர், குழாயில் உள்ள பிரச்சினைகளால் இவ்வாறான சபவங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தில் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆய்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உறுப்பினர்...

புத்தூர் வடக்கு , ஆவரங்கால் பகுதியை சேர்ந்த இவர், தனங்களப்பு பகுதியில் தென்னம் தோட்டம் ஒன்றைப் பராமரித்து வருவதுடன், தோட்டத்துடன் இணைந்த வீட்டில் வசித்தும் வந்துள்ளார்.

கடந்த சில நாள்களாக அங்கு அவரின் நடமாட்டத்தை அயலவர்கள் அவதானித்தும் இருந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து , வீட்டுக்குள் சென்று பார்த்த போது, அவர் உயிரிழந்த

> சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன

நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இவர், சில நாள்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## டக்ளஸின் முயற்சியால்...

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளில் ஒரு பகுதியும், பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான ஒரு பகுதி காணிகளிலும் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களை தொடர்ந்து ஜனாதிபதியினால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் வாரங்களில் சுமார் 2119 ஏக்கர் காணிகள் விவசாய நடவடிக்கைகளுக்காகவும், 850 ஏக்கர் காணிகள் மேச்சல் தரைக்காகவும் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த சூழல் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் கைவிடப்பட்டன.

இந்நிலையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான திணைக்களங்களினால் கணிசமானளவு விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

இதனால் பிரதேச மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் நாட்டிற்கு பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய விவசாய நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்ட நிலையில், ஜனாதிபதியினால் மேற்குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி மற்றும் துறைசார் அமைச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில், கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 1299 ஏக்கர் காணிகளும் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 280 ஏக்கர் காணிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 453 ஏக்கர் காணிகளும் பூநகரி பிரதேசத்தில் 87 ஏக்கர் காணிகளும் வன வளம் மற்றும் வனஜீவராசிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பொருத்தமான காணிகளாக அடையாளப்பட்டிருந்தது.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த சுமார் 850 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரைக்குப் பொருத்தமானது எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுபுகஸ்கந்தையை விற்கவா...

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தற்போது மூடப்பட்டுள்ளது. சிறிது காலம் சென்றதன் பின்னர் இந்த நிலையம் பழுதடைந்துவிட்டதெனக் கூறி, இதில் பிரச்சினைகள் காணப்படுவதால் அதனை நடத்திச் செல்ல முடியாதெனத் தெரிவித்து, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் இந்தியாவுக்கு வழங்கப்படலாம் என்றார்.

இதேவேளை நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தற்போது இந்தியாவுக்கு சென்றுள்ளார். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை வழங்குவதற்காகவா? பெசில் ராஜபக்ஷ, பசில் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்? எனவும் கேள்வி எழுப்பினார்.

52 வருடங்கள் பழமையான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விற்பனை செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. 52 வருடங்கள் பழமையான இந்த நிலையத்தை எவரும் வாங்குவரா்களா? என்று தெரியாது எனவும் பதில் வழங்கிய வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இதனை விரைவாக திறப்பதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றார்.

## தங்கத்தை அகழ முயன்ற...

ஆகையால், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, உடன் அமுலுக்கு வரும் வகையில், ஒருங்கிணைப்புச் செயலாளரை இடைநீக்கம் செய்துள்ளார்.

## கடமை நேரத்தின்...

எனினும், கடமை நேரத்தின் பின்னர் எவ்வித சேவைகளிலும் ஈடுபட போவதில்லையென சௌமிய குமாரவடு, இது இன்று(நேற்று) முதல் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள், நாட்டின் பொருளாதாரம் மற்றும் தேசிய சொத்துக்களை பாதுகாப்பதற்காகவும், முறையற்ற சட்டங்களுக்கு எதிராகவும் தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## வெலிகம தீயில் சிறுமி...

வீட்டின் அறையொன்றில் இருந்தே இந்தத் தீ பரவியுள்ளது. சம்பவத்தை கேள்வியுற்றவுடன் ஸ்தலத்துக்கு விரைந்த மாத்தறை தீயணைப்பு பிரிவினர், தீயைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தீயினால் வீடு முழுவதும் உள்ள மின்சாதனங்களுக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## நேற்றையகூட்டம்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டம், சட்டத்தரணி கேசுகாஷ் தலைமையில் இடம்பெற்றது. இதில் 20க்கும் மேற்பட்ட காணி உரிமையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது,"தங்களுடைய காணியை கவிகரிக்க தாங்கள் இடமளிக்கமா ட்டோம்"என்று அவர்கள் கோஷமிட்டனர்.

காணி உரிமையாளர்கள் வடமாகாண ஆளுநர் நேற்றையதினம், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து சந்திக்கவிருந்தார். இது தொடர்பில் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது காணி உரிமையாளர்களும் வருகை தந்திருந்தனர்.

ஆனால்,வேறொரு கூட்டத்தில் ஆளுநர் கலந்துகொண்டதால், காணி உரிமையாளர்களை சந்திக்கும் கூட்டம் இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால்,கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து அங்கு வருகைதந்திருந்த காணி உரிமையாளர்கள் ஏமாற்றமடைந்தனர். அவர்கள் தமது கோபங்களையும் இதன்போது வெளிப்படுத்தினர்.

## மன்னாரில் பி.சி.ஆர்...

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளன என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (01) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) மேலும் புதிதாக 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு, கொரோனா மரணங்கள் இரண்டும் இடம்பெற்றுள்ளன.

"இதன்படி, கடந்த நவம்பர் மாதத்தில், கொரோனா தொற்றாளர்களின் மரண எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. இவர்களின் இருவர் எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை. மற்றைய இருவர் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று 3 மாதங்கள் கழிந்துள்ளன.

"மன்னார் மாவட்டத்தில்

> எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எம்.எஸ்.ஏ.ஐ.டி என்ற வகையைச் சேர்ந்த மாத்திரைகளை பொது மக்கள் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். ஒன்றுகூடும் நிலைமைகளை தவிர்த்து, சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டும்" என்றார்.

தற்போது வரை 28 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

"காய்ச்சல் ஏற்படும் போது, வீடுகளில் சிகிச்சைகளை செய்து கொள்ளாமல் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அல்லது வைத்தியர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

"காய்ச்சலை தனிப்பதற்காக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எம்.எஸ்.ஏ.ஐ.டி என்ற வகையைச் சேர்ந்த மாத்திரைகளை பொது மக்கள் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

"இம்மாதம் பண்டிகை காலம் என்பதால், ஒன்றுகூடும் நிலைமைகளை தவிர்த்து, சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டும்" என்றார்.

## நட்டஈட்டு தொகையை...

ரூபாய் இழப்பீட்டு தொகை இரண்டரை இலட்சம் ரூபாயாக செலுத்தப்படுமென அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைவோருக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாயுை நட்ட ஈட்டை ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கவும் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த தீர்மானம், 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மதமாற்றத்திற்கு எதிராக...

இதற்காக அவர்கள் பாரிய அளவில் நிதியையும் தங்களுடைய ஆட்பலத்தை பயன்படுத்தி வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' எனும் ஜனாதிபதியின் செயலணி, வவுனியாவில் மக்களின் கருத்தரியும் நிகழ்வை நடத்தியது. அதில், கலந்து கொண்ட வவுனியா கிழவன் குளத்தை சேர்ந்த மார்கண்டு ஜெகதீஸ்வரன் தங்களுடைய பகுதிகளில் இடம்பெறுகின்ற மதமாற்ற செயற்பாடு தொடர்பாக மிகவும் விரிவாக ஆதாரங்களுடன் குழுவினருக்கு

> ஆலயங்களின் அறங்காவலர் சபை ஆலய நிர்வாகம் என்பன இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தெளிவுபடுத்தி இருந்தார்.

இதனை பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு குழுவினர், மது போதையில், அவருடைய வீட்டுக்குச் சென்று அவரை அச்சுறுத்தியது மட்டுமன்றி, கட்டாய மதமாற்றம் செய்யவும் முயற்சி செய்துள்ளனர்.

இதன்போது மிகவும் துணிச்சலாக செயற்பட்ட ஜெகதீஸ்வரன் இது தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததுடன் அவர்களை தற்பொழுது பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த துணிச்சலே எங்களுடைய இளைஞர்களுக்கு வர வேண்டும். இந்த விடயத்தில் நாம் அனைவரும் ஜெகதீஸ்வரனுக்கு ஆதரவாக நின்று செயற்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் எங்களுடைய ஆலயங்களின் அறங்காவலர் சபை ஆலய நிர்வாகம் என்பன இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அதிபரின் தாக்குதலால்...

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலில் ஒழுக்காற்று விசாரணையும் நடைபெறவுள்ளதாக அறிய முடிகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், காதில் ஏற்பட்ட வலி காரணமாக மாணவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு மருத்துவ சோதனையில் மாணவனின் ஒரு காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணைகள் இடம்பெற்றது.


அத்துடன், சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பொலிஸார் மேலதிக விசாரணைகளை

> கடந்த வெள்ளிக்கிழமை மாணவனை அழைத்த அதிபர் காற்சட்டை பொக்கெற்றுக்குள் கைகளை வைத்திருக்குமாறு தெரிவித்துவிட்டு ஏழு தடவைகள் காதுகளில் அறைந்துள்ளார்

முன்னெடுக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் அறிந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சு உரிய விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையிடுமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாணவனை அழைத்த அதிபர் காற்சட்டை பொக்கெற்றுக்குள் கைகளை வைத்திருக்குமாறு தெரிவித்துவிட்டு ஏழு தடவைகள் காதுகளில் அறைந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கம்மன்பில பதவியைத் துறப்பார்

■ பா.நிரோஸ்

எதிர்காலத்தில் ஏற்படும் எரிபொருள் தட்டுப்பாட்டால் மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும்போது, அதனை வேடிக்கை பார்த்துகொண்டிருக்காது, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (01) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான மேலதிக வினா கேட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். வலு சக்தி அமைச்சர் என்றவகையில் நீங்கள் (உதய கம்மன்பில) இது தொடர்பில் நன்கு அறிந்து வைத்திருப்பீர்கள் என்றார்.

மேலும், எதிர்காலத்தில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில், நாட்டு மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும்போது, அதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது, பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்றவகையில், வலு சக்தி அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவீர்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

## தேசிய பாடசாலைகள் ஊடாக அதிகாரம் பறிப்பு

■ பா.நிரோஸ்

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் 13ஆவது திருத்தச் சட்டம் கிடப்பில் போடப்பட்டு, அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பி ஸ்ரீதரன், தேசிய பாடசாலைகள் திட்டம் ஊடாகவும், அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன என்றார்.


கல்வி அமைச்சு உள்ளிட்ட நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு,தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஆகியவற்றில் தமிழ் மொழி மூலமான செயற்பாடுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

ஓய்வூதிய வயது என்பது 55 வயதாக இருந்து கொண்டு, விரும்பினால் 65 வயது வரை சேவை புரியமுடியும் என்ற திட்டமே இந்த நாட்டுக்குப் பொருத்தமாக இருக்கும். கல்வித்துறையில் போதிய ஆளணிகள் இல்லை. கல்வி அமைச்சுக்கு நாம் செல்கின்றபோது, தமிழ் மொழியில் பேச முடியாதுள்ளது. வேறு அமைச்சுகளிலும் இதே நிலைதான். இது ஒரு பாரிய பிரச்சினை. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றார்.

## அரசியல்வாதிகளின் கைகளில்

### கல்வியை வழங்க வேண்டாம்

■ பா.நிரோஸ்



தேசிய பாடசாலைகளாக எந்தெந்தப் பாடசாலைகளைத் தெரிவு செய்வது என்பதை அரசியல்வாதிகளே தீர்மானிப்பதாகத் தெரிவித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி, கல்வியை அரசியல்வாதிகளின் கைகளில் வழங்க வேண்டாம் எனவும் கேட்டுகொண்டார்.


அரசாங்கம் கல்வித்துறைக்கு ஒதுக்கி இருக்கும் நிதி, பாடசாலைகளின் பெயர்ப் பலகையை அமைப்பதற்குக் கூட போதுமானதாக இல்லை. இவ்வாறான நிலையில், கல்வி அமைச்சு எதிர்காலத்தில் முகங்கொடுக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்வது பாரிய சவாலாக அமையும் எனவும் எச்சரித்தார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று (01) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்ந்து மழைக்காலங்களில் பாதிக்கப்பட்டு வருகின்றன. 1,000 தேசிய பாடசாலைகள் உருவாக்குவதாகக் கூறிய அரசாங்கம், தேசிய பாடசாலை என்கிற பெயர் பலகைகளை வைப்பதற்கு மாத்திரமே நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

தேசிய பாடசாலைகளாக எந்தெந்தப் பாடசாலைகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதை அரசியல்வாதிகளே தீர்மானிக்கிறார்கள். இதில் விஞ்ஞானபூர்வமான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படுவதாய் தெரியவில்லை. கல்வியை அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

## மலையக கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்கிறது இ.தொ.கா

■ பா.நிரோஸ்



தோட்டத் தொழிலை மாத்திரம் நம்பியிருந்த மலையக சமூகம், இன்று கல்வியில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுவருவதாகத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், தற்போதைய அரசாங்கம் மலையக கல்வி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றார்.

கல்வி அமைச்சு உள்ளிட்ட நான்கு இராஜாங்க அமைச்சுகளின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய ராமேஸ்வரன், கல்வி வளர்ச்சியில் ஒரு காலத்தில் மலையகம் பின்தங்கியிருந்தாலும் அந்நிலைமை தற்போது மாறியுள்ளது. பல்வேறு துறைகளில் எமது சமூகம் வீறுநடைபோடக் கல்வியே காரணம்.

கல்விக்கான வளப் பற்றாக்குறை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். சமூக வளர்ச்சிக்குக் கல்வி ஒன்றே தீர்வு. மலையகத்தில் உருவாக்கப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கான வளங்களை அரசாங்கம் பெற்றுகொடுக்க வேண்டும். மலையகப் பல்கலைக்கழகம் தொடர்பான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

## ஆசிரிய உதவியாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்

■ பா.நிரோஸ்



மத்திய மாகாணத்தில் உள்ள ஆசிரிய உதவியாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், இதுவொரு மோசமான நிலை, இது தொடர்பில் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கல்வி உள்ளிட்ட நான்கு இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு, தொடர்ந்து உரையாற்றிய அவர், சுதந்திரமடைவதற்கு முன்பே இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும் தோட்ட மக்களுக்கு இலவசக் கல்வி கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் தோட்டங்களில் பாடசாலைகள் இல்லை. 1978ஆம் ஆண்டு தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றாலும் 1981ஆம் ஆண்டுக்குப் பின்னரே, தேசிய ரீதியில் மலையக பாடசாலைகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

1977ஆம் ஆண்டு சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், படிப்படியாக கல்வியில் பல வளர்ச்சிகள் அடைந்தன. தற்போதைய கல்வி அமைச்சின் பணிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்தில் உள்ள 400 ஆசிரியர் உதவியாளர்களுக்கு இதுவரையில் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அவர்களுக்கு வெறும் 10 ஆயிரம் ரூபாயே சம்பளமாக வழங்கப்படுகிறது. இது தொடர்பில் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### இடமாற்ற பிரச்சினையால்

# வினைத்திறனான சுகாதார சேவைக்கு பாதிப்பு

வைத்தியர்களின் இடமாற்றப் பிரச்சினையானது, பாரியளவில் நாட்டிலே சீரான, வினைத்திறனான சுகாதார சேவையை நடத்திச் செல்வதில் பாதிப்பாக உள்ளதென அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் நேற்று (1) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கமானது, வைத்தியர்களின் இடமாற்ற சபையில், பிரதான தரப்பினராக இருந்து வைத்தியர்களை நாட்டிலே சீராக நியமித்து, அங்கே உரிய முறையில் வைத்திய சேவை கிடைக்கும் விதத்தில் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில், வைத்தியர்களின் இடமாற்றப் பட்டியலானது சரியான காலத்தில் சரியான முறையில் வெளியிடப்பட்டு, அவற்றைத் தாமதமின்றி அமல்படுத்தும் போதே தூர பிரதேசங்களில் இருக்கின்ற மக்களுக்கு, நகர்ப்புற வைத்தியசாலைகளில் விசேட வைத்தியசேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும்.

ஆனால், தற்பொழுது வைத்திய சேவைகளில் இருக்கின்ற 38 சதவீத வைத்தியர்கள் தங்களுக்கு உரிய இடமாற்ற அனுமதி வழங்கப்பட்ட இடத்தில் கடமை புரியவில்லை.

குறிப்பாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்ற பட்டியலின் அடிப்படையில் அவர்கள் தற்பொழுது இல்லை. 6,969 வைத்தியர்கள் அவர்களுக்கு இடமாற்ற பட்டியல் வெளியிடப்பட்டு, அவர்களுக்கு உத்தரவிடப்பட்ட இடத்தில் கடமை புரியவில்லை.

இடமாற்ற செயற்பாடானது சரியான முறையில் செயற்படுத்தப்படாவிட்டால், தூர பிரதேசங்களில் வைத்தியர்களை நியமிப்பதில் சிக்கல்கள் ஏற்படலாம்; தாமதம் ஏற்படும். வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும். இடர் பிரதேசங்களில் இவ்வாறு பற்றாக்குறை ஏற்படும் போது, நாட்டின் முழு சுகாதாரத்துறையும் பாதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளது. இதனால் பல வைத்தியசாலைகளில் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கான முழு பொறுப்பையும் சுகாதார அமைச்சே ஏற்க வேண்டும் என்றார்.

## நாயாற்றில் மூழ்கிய கடற்படையின் படகு

■ செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, நாயாற்று கடற்படை முகாமுக்குச் சொந்தமான கரையோர சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபடும் படகு, கரையோர பகுதியில் விபத்துக்குள்ளாகி நீரில் மூழ்கியுள்ளது.

'செட்ரிக்' எனப்படும் கரையோர சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபடும் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நாயாற்று பகுதியில் அதிகளவான வெள்ள நீர் பெருங்கடலுடன் கலப்பதால் நீரோட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. களப்புப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. படகு விபத்துக்குள்ளாகியதில் அதில் சென்ற கடற்படையினர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார்கள்.

## வலையில் குண்டு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், மயிலிட்டி பகுதியில் மீனவர் வீசிய வலையில் கைக்குண்டு ஒன்று சிக்கியுள்ளது.

பலாலி - மயிலிட்டி பகுதி கடலில் மீனவர் ஒருவர் மீன்பிடியில் நேற்று முன்தினம் (30) ஈடுபட்டிருந்த போது, அவரது வலையில் கைக்குண்டு ஒன்று சிக்கியுள்ளது.

அது தொடர்பில் அவரால் பலாலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அதனை மீட்டுச் சென்றனர்.







## இந்தியாவில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, பல்வேறான சந்திப்புகளில் ஈடுபட்டுள்ளார்.

## ஏழு புதிய நியமனங்களுக்கு உயர்பதவிகள் குழு அனுமதி

ஆறு இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், உயர்ஸ்தானிகர் ஒருவரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (30) இடம்பெற்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில், தென்னாபிரிக்காவுக்கான உயர்ஸ்தானிகராக பேராசிரியர் காமினி குணவர்தனவை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக எம்.என்.பி. ஹபுஹின்ன, களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.டி. மாதரராச்சி ஆகியோரை நியமிக்க உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள், தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜே.எம். திலகரத்ன பண்டா , சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக எஸ்.டீ. கொடிகார ஆகியோரை நியமிப்பதற்கு இந்தக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளராக எஸ். எச். ஹரிஸ்சந்ரவை நியமிப்பதற்கும் சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.எச்.டி.கே. சமரகோன் நியமிப்பதற்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

### அட்டாளைச்சேனை கல்லூரியில்

## மீண்டும் கல்வி நடவடிக்கை

■ எம்எஸ்.எம். ஹனீபா

2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி முதல் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக செயற்பட்டு வந்த அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி, மீள கல்வி நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி, நேற்று (01) தெரிவித்தார்.

இதனையடுத்து, கல்லூரியின் நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், கல்வியற் கல்லூரி இறுதியாண்டு பயிலுநர்களுக்கான கற்கை நெறிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், பயிலுநர்கள் பாடசாலைகளில் உள்ளக கற்பித்தல் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வியற் கல்லூரிக்கு இணைக்கப்பட்டுள்ள புதிய பயிலுநர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கப்படவில்லையெனவும், கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலின் பின்னரே தீர்மானிக்கப்படுமெனவும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.



ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட விவகாரத்தில்

# கண்துடைப்பு



ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு, தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டமை வெறுமனே கண்துடைப்பு சம்பவமாகவே காண்கிறோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து, நேற்று (01) ஊடகங்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ளதாவது: முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த 27ஆம் திகதி செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரன், இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியது. இது மிகவும் கீழ்தரமானது செயலாகும்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது பணியைச் செய்து கொண்டிருந்தபோது, அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு இராணுவத்தினர் கேட்டுக்கொண்டதை அடுத்து, தனது அடையாள அட்டையை காண்பிக்க முற்பட்ட வேளையே அவர் தாக்கப்பட்டதாக அறிகின்றோம்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு, பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டமை, வெறுமனே கண்துடைப்பு சம்பவமாகவே நாம் காண்கிறோம்.

இது தொடர்பாக, சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைக்க வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறான சம்பவங்கள், ஊடகத்துறைக்கு பெரும் சவாலாக அமைகின்றன. இவ்விடயங்கள் குறித்து, நாம் அவதானமாக இருந்து, பாதிக்கப்படுவோருக்காக எப்போதும் குரல்கொடுப்போம் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக ஊழியர்கள்

# போராட்டம்

மட்டக்களப்பு நிருபர்கள்





உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்கள், தம்மை சேவையில் நிரந்தரமாக்குமாறு கோரி, நேற்று (01) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாலும் ஏககாலத்தில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஏறாவூர் நகர சபையின் முன்னால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில், அங்கு கடமை புரியும் சுமார் 66 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

'180 நாள் பணிபுரிந்தோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தில் எங்களையும் உள்வாங்கு', '8 வருடங்களாக நாங்கள் ஆகக் குறைந்த ஊதியத்தைத்தான் பெறுகின்றோம்', 'ஊரைச் சுத்தப்படுத்தும் எங்களின் சேவைக்கு மதிப்பளி' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு, ஊழியர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

தற்காலிக ஊழியர்களால் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர், ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம். எஸ் நழிமிடம் கையளிக்கப்பட்டது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த நகர சபைத் தலைவர், "இந்த ஊழியர்கள், மாதாந்தம் சுமார் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைந்த தொகையையே ஊதியமாகப் பெறுகின்றனர். அதுவும் இவ்வூர் மக்களின் வரிப்பணத்தில் இருந்துதான் இந்த மாதாந்தக் கொடுப்பனவை வழங்குகின்றோம். எனினும், அவர்கள் ஆற்றும் பணி அளப்பெரியது" என்றார்.

அதேபோன்று, காத்தான்குடி நகர சபைக்கு முன்னால் ஒன்று கூடிய தற்காலிக, அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை, காத்தான்குடி நகர சபை கணக்காளர் ஏ.எஸ்.மனாசிர் அல்சனிடம் கையளித்தனர்.

மேலும், மண்முனைதென் எருவில் பற்று பிரதேச சபையில் 64 சுகாதார ஊழியர்கள் கடந்த ஆறு வருடகாலமாக அமைய அடிப்படையில் கடமையாற்றி வரும் ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களும் தமக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தருமாறு கோரி, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஞா.யோகநாதனிடம் மகஜர் கையளித்தனர்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் சுமார் 940 ஊழியர்கள் நிரந்தர நியமனமின்றி, சுமார் எட்டு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.




வவுனியாவில்

## எயிட்ஸ் தின ஊர்வலம்

க. அகரன்

உலக எயிட்ஸ் தினம், நேற்று டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நினைவுகூரப்பட்டது.

அந்தவகையில், இலங்கையில் இம்முறை 'சமத்துவமின்மையை ஒழிப்போம்; எயிட்ஸை ஒழிப்போம்; பெருந்தொற்றை ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று (01) அனுஷ்டிக்கப்பட்டது.

அதன்படி, எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம், வவுனியா பொது வைத்தியசாலையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான ஊர்வலம், குருமன்காட்டு சந்தி ஊடாக, வைரவ புளியங்குளம் சென்று, வவுனியா நகரம் ஊடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது.

இவ்விழிப்புனர்வு ஊர்வலத்தில் ஒட்டோ உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னதாக, காலை 10 மணிக்கு வவுனியா வைத்தியசாலையில் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வும் நடைபெற்றிருந்தது. குறித்த செயலமர்வில் வைத்தியசாலை பணிப்பாளர் இ.ராகுலன், விசேட வைத்திய நிபுணர் இளங்குமரன், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



மாந்தை கிழக்கு மாணவர்களின்

## போக்குவரத்து நெருக்கடி இன்று ஆராயப்படும்

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக, மாவட்டச் செயலகத்தில் இன்று (02) நடைபெறவுள்ள போக்குவரத்து துறையினருடனான கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (01) அவர் தெரிவிக்கையில், "மாந்தை கிழக்கில் தனியார் பஸ்ஸில் செல்கின்ற மாணவர்கள், பாடசாலை முடிந்தவுடன் பஸ் இன்மையால் வீடு திரும்ப முடியால் அல்லல்படுகின்றமை தொடர்பாக எனக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும், ஊடகங்கள் மூலம் இதனை அறிந்து கொண்டேன். எனவே, இவ்விடயம் தொடர்பாக போக்குவரத்துத் துறையினருடன் நாளை (இன்று) நடைபெறவுள்ள கலந்துரையாடலில் ஆராயப்படும்.

மாந்தை கிழக்கில் இருந்து, காலையில் மாணவர்களை பாடசாலைகளுக்கு ஏற்றிச் செல்கின்ற தனியார் பஸ்கள், பாடசாலை முடியும் நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. இதனால், தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்து வருகின்ற நெருக்கடி தொடர்வதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே, பாடசாலை முடியும் வேளையிலும் மாணவர்களை ஏற்றக் கூடிய தனியார் பஸ்கள் சேவை இடம்பெற வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாகும்.

கொரோனா தொற்றுப் பரவில் தொடங்குவதற்கு முன்னர் காலை, மாலை என இரு சந்தர்ப்பங்களிலும் தனியார் பஸ் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பணம் வைத்து

## சூதாடிய எண்மர் கைது

செந்தூரன் பிரதீபன்



கோப்பாய் மத்தி, கல்வியற் கல்லூரிப் பகுதியில் பணம் வைத்து சூதாடிய 8 பேர், நேற்று (01) கைது செய்யப்பட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சூது விளையாடிக் கொண்டிருந்த போது, பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 மோட்டார் சைக்கிள்கள், 2 ஒட்டோக்கள், 50 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



எரிவாயு அடுப்பு

## வெடித்துச் சிதறல் தொடர்கிறது

வா.கிருஸ்ணா

கிழக்கு மாகாணத்தில் ஆங்காங்கே சிலிண்டர்கள், எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறுகின்ற சம்பவங்கள் அண்மைக் காலமாக பதிவாகி வருகின்றன.

அந்தவகையில், மட்டக்களப்பு, திராய்மடு, சுவிஸ் கிராமம் பகுதியிலும் நேற்று (01) காலை 10 மணியளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது.

எரிவாயு அடுப்பை செயற்படுத்தி விட்டு வெளியில் வந்து உறவினர்களிடம் கதைத்துக் கொண்டிருந்த வேளை, அவர்களது சமையலறையில் வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டதை கேட்டு, அங்கு சென்று பார்த்தபோது, எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளமையைக் கண்டதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பாக, மட்டக்களப்பு பொலிஸாருக்கும் சுவிஸ் கிராமத்தின் கிராம அலுவலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## யானைகள் அடாவடி; பயிர்கள் சேதம்

எம்.எம்.அஹமட் அனாம்

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குகநேசபுரம் கிராமத்தில் நேற்று (01) அதிகாலை புகுந்த யானைகளின் அடாவடியால் தோட்டப் பயிர்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குகநேசபுரம் கிராமத்தில் வாழும் மக்கள், தங்களது காணியில் பயன்தரும் மரங்கள், மரக்கறித் தோட்டங்கள் அமைத்து பராமரித்து வரும் நிலையில் இரவு வேளைகளில் வரும் யானைகள் இவற்றைச் சேதப்படுத்திச் செல்கின்றன.

அவ்வாறே நேற்றையதினமும் மரவள்ளி தோட்டம், வீட்டுப் பயிர்கள், வேலிகள் ஆகியவற்றை யானைகள் துவசம்சம் செய்துள்ளன.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில், குகநேசபுரம் பகுதி மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு யானை வேலிகளை அமைத்துத் தருமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



தேசிய ரீதியில் வெற்றி பெற்ற

## மாணவர்களுக்கு பரிசில்கள்

பேரின்பராஜா சபேஷ், வா.கிருஸ்ணா




தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு, தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தில், உலகளாவிய மட்டத்திலான தொழிற்படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ், தொழில் வழிகாட்டல் வாரம், ஒக்டோபர் மாதம் 04ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொவிட்-19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, நிகழ்நிலை மூலமாக மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம், வினாவிடை போட்டி மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கட்டுரை போட்டி என்பன நடைபெற்றிருந்தன.

இப்போட்டிகளில் பங்குபற்றி, தேசிய மட்டத்தில் வெற்றிபெற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த சாதனையாளர்களையும் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வே, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.



## பேராசிரியராக பதவியுயர்வு

எம்.எஸ்.எம். ஹனீபா, பாறுக் ஷிஹான், எஸ். அஷ்ரப்கான், நூருல் ஹுதா உமர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் எம்.ஏ.எம். பௌசர் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவர் மிக இளம் வயதில் பேராசிரியராகப் பதவியுயர்வைப் பெற்றுள்ளமை பல்ககைலக்கழக வரலாற்றில் முன்மாதிரியாக அமைகின்றது. இப்பதவியுயர்வின் மூலம் கலை கலாசாரப் பீடத்தின் இரண்டு பேராசிரியர்களைக் கொண்ட ஒரேயொரு துறையாக அரசியல் விஞ்ஞானத்துறை திகழ்கின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையில் விசேட கற்கையினைப் பூர்த்தி செய்த பேராசிரியர் எம்.ஏ.எம். பௌசர், அத்துறையில் முதல் வகுப்புப் பட்டத்தைப் பெற்ற முதலாவது மாணவர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

உறவினர்களிடையே கைகலப்பு;

## கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட இளைஞன்

எஸ்.தில்லைநாதன்

கரவெட்டி மேற்குப் பகுதியில் வைத்து கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (30) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் லக்சன் (வயது 28) என்பவரே இவ்வாறு படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

உறவினர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின் போதே, இவர் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



வீட்டுத்திட்ட கிராமம்

## வெள்ளத்தில் மூழ்கியது

எம்.றொசாந்த்

தொடரும் மழை காரணமாக, யாழ்ப்பாணம், புங்குடுதீவு, 25 வீட்டுத்திட்ட கிராமம் வெள்ளத்தில் மூழ்கியதால், அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு 01 வட்டாரம், ஜே 28 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 25 வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, குறித்த வீடுகளுக்குச் செல்லும் வீதியும் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்களுடைய போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்தில்

# புதிய பிரதேச செயலகங்களின் நிலை என்ன?

## மலையக அரசியல் அரங்கம் மாவட்டச் செயலாளரிடம் மனு

கடந்த ஆட்சிக் காலத்தில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் உருவாக்கப்பட்ட ஐந்து பிரதேச செயலகங்கள், இன்னும் அமைக்கப்படாமை குறித்து, மலையக அரசியல் அரங்க உறுப்பினர்கள் நுவரெலியா மாவட்ட செயலாளர் ஜி.கே.ஜி.ஆர்.பி.கே. நந்தனவைச் சந்தித்து, கலந்துரையாடியதுடன் தமது கோரிக்கை மனுவையும் கையளித்தனர்.



மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ், செயலாளர் கிருஷ்ணகுமார், பிரதான அமைப்பாளர் இராமன் செந்தூரன் உள்ளிட்ட பலர் மாவட்டச் செயலாளரைச் சந்தித்து, கலந்துரையாடிய பின்னர், மனுவைக் கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் எம்.பி திலகராஜ், "நுவரெலியா மாவட்டத்தில் தற்போது ஐந்து பிரதேச செயலகங்களே காணப்படுகின்றன. இதனை அதிகரிக்க வேண்டும் எனும் கோரிக்கை, கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பொது வெளியில் முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

2016ஆம் ஆண்டு பாராளுமன்றில் முதன் முறையாக இது குறித்த பிரேரணையை நான் முன்வைத்ததுடன், அதற்குச் சாதகமாக பதில் அளித்த அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன சமர்பித்த அமைச்சரவை பத்திரத்தின் படி, மேலதிகமாக ஐந்து பிரதேச செயலகங்களை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது.

எனினும், இன்று வரை நடைமுறையில் மேலதிக பிரதேச செயலகங்களை காணக் கிடைக்கவில்லை.

தற்போது புதிய பிரதேச செயலகங்கள் ஐந்தினை அமைப்பதற்குப் பதிலாக, அவற்றை உப பிரதேச செயலகங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. அப்படி நடக்குமானால், அது பாரியதோர் உரிமை இழப்பாகும். ஆனால், இது குறித்து நுவரெலியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் எவரும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

எனவே, ஐந்து புதிய பிரதேச செயலகங்கள் அமைப்பது தொடர்பில், 2019ஆம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு உள்ளதால், அதனை முழுமையான பிரதேச செயலகமாக நடைமுறைப்படுத்துமாறு எமது கோரிக்கை மனுவை முன்வைத்தோம்" என்றார்.




## கொட்டகலையில் விபத்து; ஒருவர் காயம்

■ எம்.கிருஸ்ணா

கொட்டகலை பகுதியில் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில், சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளானதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை- ட்ரேட்டன் பகுதியிலேயே, நேற்று (1) காலை 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொட்டகலை பகுதியிலிருந்து திம்புள்ள பத்தனைப் பகுதிக்கு அதிக வேகத்துடன் சென்ற ஓட்டோ, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொட்டகலை பிரதேச சபைக்கு சொந்தமான லொறியில் மோதியுள்ளது.

அதிக வேகமே விபத்துக்கான காரணம் எனவும் விபத்து தொடர்பில் மேலதிக விசாணைகள் முன்னெடுத்து வருவதாகவும் திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் திட்டமிடப்படாத செயற்பாடுகளே

## நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம்

### திகாம்பரம் எம்.பி தெரிவிப்பு

■ துவாரகஷான்

அரசாங்கத்தின் முறையான திட்டமிடப்படாத செயற்பாடுகளே எமது நாட்டின் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அரசாங்கம் இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய, தனியார் துறைக்கு அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு கொரோனா பரவலே காரணம் என்று அரசாங்கமும் அமைச்சர்களும் கூறி வருகின்றார்கள். அது உண்மையாக இருந்தாலும், அரசாங்கத்தின் திட்டமிடப்படாத அவசர செயற்பாடுகளும் காரணமாக அமைந்துள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. உதாரணத்துக்கு இரசாயன உர இறக்குமதியைத் தடை செய்தமையைக் குறிப்பிடலாம்.

எந்தவொரு விடயமும் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வரும் போது, அதற்குப் பதிலாக புதிய விடயத்தை அறிமுகப்படுத்த வேண்டுமானால், பழைய விடயங்களை நடைமுறையில் வைத்துக் கொண்டே படிப்படியாக புதிய விடயங்களைப் புகுத்தினால் நிச்சயம் வெற்றி பெற முடியும். ஆனால், இரசாயன உரத்தை உடனடியாகத் தடை செய்து விட்டு, சேதனப் பசளையை அமல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்துள்ளன. தேவையான சேதனப் பசளை கையிருப்பில் இல்லாத காரணத்தால் இரசாயன உரமும் இல்லாமல் சேதனப் பசளையும் இல்லாமல் விவசாயத் துறையும் தேயிலை உற்பத்தித் துறையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் சீர்குலையத் தொடங்கியுள்ளது என்றார்.

காணாமல் போன பொலிஸ் சார்ஜன்ட்

## சடலமாக மீட்கப்பட்டார்

■ சேஹ்ன செனவிரத்ன"



நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்டாக கடமையாற்றிய ஒருவர், கடமை முடிந்து கெலிஓயா பிரதேசத்திலுள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய நிலையில் காணாமல் போனார். பின்னர் அவரது சடலம், மகாவலி கங்கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 3 பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய சமரநாயக்க என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நவம்பர் மாதம் 29ஆம் திகதி தனது கடமைகளை முடித்துக்கொண்டு கெலிஓயா நகருக்கு வருகை தந்த அவர், அதிகம் மழை காரணமாக வீட்டுக்கு வருவதற்கு தாமதமாகும் என வீட்டாருக்கு அலைபேசி ஊடாக அறிவித்த பின்னர், அவருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (30) இராணுவத்தினரின் உதவியுடன் பேராதனை பொலிஸார் மகாவலி கங்கையில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்த போது, குறித்த சார்ஜன்டின் பயணப் பை கண்டுபிடிக்கப்பட்டதுடன், நேற்று (1) அவரது சடலமும் மீட்கப்பட்டுள்ளது.





## பகிர்ந்தளிப்பு

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில், ஹாலி–எல நகரை அண்மித்த பிரதேசங்களில் வசிப்போருக்கு ஒரு தொகுதி தென்னங்கன்றுகள் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. (ராமு தனராஜா)

அපේ ජන උරුමය සංධානය
எங்கள் மக்களின் உரிமைக்கான கூட்டணி
Alliance For The Rights Of Our People

## தேநீர் கோப்பையில் புதிய கூட்டணி

■ ஆ.ரமேஸ்

15 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து 'தேநீர் கோப்பை' சின்னத்தில் எங்கள் மக்களின் உரிமைக்கான கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இதன் ஆரம்ப வைபவம், கொழும்பு சுதந்திர சதுக்க பொது நூலக கேட்போர் கூடத்தில், நேற்றுமுன்தினம் (30) இடம்பெற்றதென இக் கூட்டணி கட்சியில் இணைந்து செயற்படும் ஐக்கிய சுதந்திர கட்சியின் பொது செயலாளர் சவேரியார் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கூட்டணி கட்சியில், நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் முன்னேற்ற கழகம், மக்கள் சுதந்திரக் கட்சி ஆகியவையும் இணைந்து செயற்படுவதாக சவேரியார் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சி, அருணலு ஜனத்தா பெரமுன, எங்கள் மக்கள் உரிமைக் கட்சி, மக்கள் முன்னேற்றக் கட்சி, நுவரெலியா ஐக்கிய சுதந்திரக் கட்சி, நுவரெலியா ஜாதிக்க ஜனபல கட்சி, ஹலபிம ஜனத்தா கட்சி, ஐக்கிய இலங்கை ஜனபல கட்சி, இலங்கை இந்திய வம்சாவளி கட்சி, ஐக்கிய சுதந்திரக் கட்சி, ஐக்கிய ஜனநாயக மஹஜன கட்சி, இலங்கை ஜனநாயக தேசிய கட்சி என 15 அரசியல் கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளன.

எதிர்காலத்தில் மேலும் பல அரசியல் கட்சிகள் 'எங்கள் மக்களின் உரிமைக்கான கூட்டணி'யில் இணைந்து செயற்பட முன்வரவுள்ளதாகவும் சவேரியார் ஜேசுதாஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து

## மவுண்ட்ஜின் தோட்ட மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்

■ டி.ஷங்கீதன்

கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஐந்து நாள்களாகப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த வட்டவளை, மவுண்ட்ஜின் தோட்ட மக்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுடன் (1) நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல், நேற்று முன்தினம் (30) மாலை கொழும்பில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தோட்ட தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.




இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், "பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களை, நேரில் சென்று சந்தித்து, கொழும்பில் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்பாடு செய்வதாக கூறியிருந்தேன். அதற்கு அமைய, கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றபோது, அடுத்த வாரம் குறித்த தோட்டத்திற்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவர் தலைமையில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு, அங்கிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்" என்றார்.

அடாவத்தையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம்

## சுமூகமான தீர்வால் கைவிடப்பட்டது

■ ராமு தனராஜா

லுணுகலை, அடாவத்தை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், லுணுகலை வைத்தியசாலைக்கு அருகாமையில் வைத்து, அடாவத்த தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று (1) அடாவத்தைப் பகுதியில் இளைஞர்களும் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு வருகை தந்த தோட்ட அதிகாரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், இளைஞர் ஆகியோர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இதன்போது, சுமூகமான தீர்வு கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்விடத்தில் இருந்து கலைந்து சென்றனர்.



# குமிழ்விடும் சிலிண்டர்கள்: வெடிக்கும் அடுப்புகளுக்கு யார் பொறுப்பு?

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பை அடுத்து, மண்ணெண்ணெய் மற்றும் விறகு அடுப்புகள் மீது கடும் கரிசனையை மக்கள் காண்பித்திருந்தனர். அவ்விரு அடுப்புகளே பாதுகாப்பானவை என்பதை நிரூபித்து காட்டும் வகையில், காஸ் சிலிண்டர்களில் குமிழ்கள் கொப்பளிக்கின்றன; காஸ் அடுப்புகள் வெடித்துச் சிதறுகின்றன. இவ்விரண்டையும் இணைக்கும் குழாய்களும் வெடிக்கின்றன.

அத்தியாவசியப் பொருட்கள், மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, சமையலறையை முகம்சுளித்துப் பார்த்தவர்கள் இருந்தனர். இந்நிலையில் சமையலறை பக்கமே தலையை வைக்கவிடாது, தலைத்தெறிக்க ஓடும் வகையில், காஸ் அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்களும் சிலிண்டர்கள் குமிழ்விடும் சம்பவங்களும், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

காஸ் தட்டுப்பாட்டுக்குப் பின்னர், புதிதாகக் கொள்வனவு செய்த காஸ் சிலிண்டர்களிலேயே இவ்வாறான அனர்த்தம் ஏற்படுவதாகத் தகவல் வெளியானதை அடுத்து, ஏற்கெனவே, கொள்வனவு செய்து பாவிப்போர் மனதைத் தேற்றிக்கொண்டனர். அந்தச் சிலிண்டர் தீர்ந்துவிட்டால், அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிக்கவே வேண்டும்.

தங்களுடைய வீடுகளில் பயன்படுத்தப்பட்ட காஸ் சிலிண்டர்கள் தீர்ந்துவிட்டதை அடுத்து, பெரும் சுமையை இறக்கிவைத்துவிட்டது போன்ற சந்தோஷத்தில் பலரும் இருக்கின்றனர்.

இதற்கிடையில், எரிபொருட்களின் விலையேற்றத்தை அடுத்து, மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கான கேள்வி அதிகரித்தது. அதனைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்ட வர்த்தகர்கள், மண்ணெண்ணெய் அடுப்புகளின் விலைகளை கிடுகிடுவென அதிகரித்துக் கொண்டனர். மண்ணெண்ணெயின் கேள்வியும் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மாற்று ஏற்பாடுகள், நகர்ப்புறங்களுக்கு சாத்தியப்படாது; தொடர்மாடி குடியிருப்புகளுக்குப் பொருந்தவே பொருந்தாது. அங்கு வசிப்போர், எந்நேரமும் அவதானமாகவே இருக்கவேண்டும். விழிப்புணர்வுடன் இருந்தமையால், காஸ் சிலிண்டரால் ஏற்படவிருந்த பேரனர்த்தங்கள் பல தவிர்க்கப்பட்டன.

தனது வீட்டின் சமையலறைக்குள் கூட செல்லமுடியாத நிலைமையொன்று, இலங்கை குடிமக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை, விடயதானத்துக்குப் பொறுப்பானவர்களும் காஸ் நிறுவனங்களும் அரசாங்கமும் கவனத்தில் கொண்டு, ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு அதிரடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

காஸ் அடுப்பை இழந்துநிற்கும் குடும்பங்களுக்கு, நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். சந்தையில் விநியோகிக்கப்பட்டிருக்கும் சந்தேகத்துக்கிடமான காஸ் சிலிண்டர்களை மீளப்பொறுப்பேற்று, பாதுகாப்பான சிலிண்டர்களை விநியோகிக்க ஆவன செய்யவேண்டும்.

சிலிண்டர்களைக் கொள்வனவு செய்து, வீட்டுக்கு எடுத்துச் சென்றதன் பின்னர், அதிலிருக்கும் 'சீலை' அகற்றிவிட்டு, மூடியை கழற்றியதன் பின்னரே, காஸ் சிலிண்டருடன் இணைக்க வேண்டும். அதற்கு முன்னர் சிலிண்டர் பாதுகாப்பானதாகவே தெரியும். ஆனால், மேலே குறிப்பிட்ட படிமுறைகளின் பின்னர், குமிழ்கள் வருமாயின் அதற்கு பொறுப்புக் கூறுவது யார்? அவ்வாறான குமிழ்விடும் சிலிண்டர்களை கடைக்காரர்கள் மீளப்பொறுப்பேற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். மீளப்பொறுப்பேற்குமாறு நிறுவனங்கள் தங்களுக்கு அறிவுறுத்தவில்லையென கையை விரித்துவிடுகின்றனர். இது பேராபத்துக்கு வித்திடும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

இடி, மின்னலுடன் பெருமழை பெய்தால், அது நிரந்தரமாகப் பெய்துவிடுமோ என்று மக்கள் பயப்பிடுவது வழக்கம். அது நிலையற்ற மாற்றம் என்பதை எவர்தான் உணர்கின்றார்கள்.

துன்பங்கள் வந்தால், அது மாறாது எனத் தீர்மானமாக எண்ணிவிடுகின்றார்கள். வாழ்க்கைகூட வானிலை மாற்றம் போன்றதுதான். திடீர் என மழைவரும்; புயல்வரும்; அப்புறம் கடும் வெயிலும் அனலாய்க் கொதிக்கும்.

அந்தந்தச் சூழ்நிலை எதுவோ, அதற்கு மாறாக மனிதர்கள் பேசி விடுகின்றார்கள். மாற்றங்கள் பொதுவானவை என இன்னமும் புரிந்து கொள்ளாதது போல் வாழ்வது, வேடிக்கையாகத் தோன்றுகின்றது.

எந்த நிலையையும் ஏற்றுக் கொண்டு, தளர்வு இல்லாத நிலையில் வாழப்பழக வேண்டும். இயற்கை எமக்கு எதிரி அல்ல; அதைத் திட்டுவது அநீதி. காலமாற்றம் எல்லாமே மக்களின் நலனுக்காகவே உருவானவை.

நல்லவைகளைக் கெட்டவைகள் எனக் கருதலாகாது. மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமாயின், எல்லா அனுபவங்களையும் ஏற்று இரசிக்க வேண்டும். இன்பத்தை இரசிப்போர், துன்பத்தையும் எதிர்கொள்ள வேண்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய அரசியலின் இராஜதந்திரத் தோல்வி

புருஜோத்தமன் தங்கமயில்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள் குழு எம்.ஏ. சுமந்திரன் தலைமையில், அமெரிக்காவில் பல தரப்பினருடனான சந்திப்புகளை நடத்திவிட்டு, நாடு திரும்பியிருக்கின்றது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்புகளில், கூட்டமைப்புடன் புலம்பெயர் தேசங்களிலுள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். 'அரசியலமைப்பு தொடர்பிலான நிபுணத்துவ உரையாடல்கள்' என்று, அமெரிக்கச் சந்திப்புகளுக்குப் பெயர் சூட்டப்பட்டாலும், அந்தச் சந்திப்புகளின் பிரதான நோக்கம், இலங்கையின் எதிர்கால அரசியல் மாற்றங்கள் குறித்தானது என்பது வெளிப்படையானது.

இலங்கையின் இனமுரண்பாடுகளுக்கான தீர்வு பற்றிய உரையாடல் வெளியை அமெரிக்காவோ, இந்தியாவோ அல்லது இன்னொரு நாடோ திறக்கின்றது என்றால், அதன் பின்னால் தென் இலங்கையின் ஆட்சி பீடத்தின் மீதான அதிருப்தி இருப்பதாகச் சந்தேகமின்றி நம்ப முடியும். மாறாக, தமிழ் மக்களின் நலன்களோ அமைதிக்கான வழிகளோ முக்கியத்துவம் பெறுவதில்லை.

தற்போதும் அப்படியான களமே, தமிழ் மக்களின் முன்னால் விரிக்கப்படுகின்றது. பிரித்தானிய ஆட்சிக்காலம் முதல், சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளோடு இருக்கின்ற தமிழ் மக்கள், அவை நிறைவேறும் வரையில், தன்னுடைய தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிடுவதற்கான எந்த வாய்ப்புகளும் இல்லை.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் தோற்றம் பெற்றது முதல், போராட்டங்கள், அதற்கான அர்ப்பணிப்புகள் சார்ந்து வெளிப்படுத்திய கடப்பாட்டை, இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகளில், அதன் போக்கு கொண்டிருக்கவில்லை. அதுதான், தீர்க்கமான எந்த அடைவையும் பெற்றுக்கொள்ள முடியாமைக்கான முக்கிய காரணமாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் உணர்வு ரீதியாக மேலேழுந்த அளவுக்கு, அதன் செயற்பாட்டு வடிவம் மேலெழவில்லை. அதிக நேரங்களில், ஒற்றைத் தலைமையில் அல்லது ஒரு சில ஆளுமைகளில் தங்கியிருக்க விளைந்தது. அதனால், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளில் அல்லது இயக்கங்களில் தங்கியிருக்க ஆரம்பித்தது. தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்ட காலத்திலும் அதன் பின்னராக தலைவர் பிரபாகரனின் ஆயுதப் போராட்ட காலத்திலும் அப்படியாகவே இருந்தது.

முள்ளிவாய்க்கால் முடிவுகளோடு தமிழ்த் தேசிய அரசியலில் தனிநபர் ஆளுமைக்கான வாய்ப்புகள் இல்லாமற்போய், கூட்டு ஆளுமைக்கான வாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் காலத்தைப் போல் அல்லாவிட்டாலும், இரா.சம்பந்தன் எனும் ஆளுமையைச் சுற்றி, தமிழ்த் தேசிய அரசியல் கட்டமைக்கப்பட்டது. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான தமிழர் அரசியல் என்பது, சம்பந்தனால் வழிநடத்தப்படுவதுதான்.

மேற்கண்ட மூன்று கட்டங்களிலும், அதாவது தந்தை செல்வா காலம் தொடங்கி இன்று வரையில், தமிழ்த் தேசிய அரசியல் என்பது, இராஜதந்திர ஊடாட்டங்களில் தங்களின் வலுவைச் சரியாக புரிந்து கொண்டு செயற்படவில்லை என்பது பெரும் பின்னடைவாகும்.

தமிழ்த் தேசிய அரசியலோ அல்லது அதன் பிரதான இலக்குகளோ, அயல் நாடான இந்தியாவுக்கு என்றைக்குமே அச்சுறுத்தலாக அமையாது என்பதைப் புரிய வைப்பது மாத்திரம்தான், தமிழர் அரசியலின் வெளியுறவுக் கொள்கை அல்லது இராஜதந்திர நிலைப்பாடு என்பது மாதிரியான கட்டம் நிலைபெற்றுவிட்டது. தந்தை செல்வா காலத்தில், அ.அமிர்தலிங்கம் உள்ளிட்டவர்கள் புதுடெல்லிக்கும் சென்னைக்கும் அடிக்கடி இதனை வெளிப்படுத்துவதற்காகவே பயணித்தார்கள்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த சில காலங்களுக்கு உள்ளேயே, அந்தப் போராட்டத்தை இந்தியா கையாளத் தொடங்கியதும், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர அனைத்து இயக்கங்களும், இந்தியாவின் கருவிகளாகச் சில காலத்துக்குள்ளேயே மாறிவிட்டன.

அமைதி காக்கும் போர்வையில் நாட்டுக்குள் புகுந்து, அத்துமீறல்களில் ஈடுபட்ட இந்திய இராணுவத்துக்கு எதிராகத் தங்களுடைய போராட்டத்தைப் புலிகள் ஆரம்பித்த போது, புலிகளை அழித்தொழிக்கும் நிலைப்பாட்டுக்கு இந்தியா சென்றது. தனி ஈழத்தை கோரிக்கையாகக் கொண்டு, 30க்கும் அதிகமான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோன்றினாலும், புலிகளைத் தவிர அனைத்து இயக்கங்களும் புதுடெல்லியால் இலகுவாகக் கையாளப்பட்டன. இதனால், அந்த இயக்கங்களால் தாயகத்தில் மேலெழ முடியவில்லை.

ஒரு கட்டத்தில், அந்த இயக்கங்கள் இந்திய இராணுவத்தின துணைப்படைகள் போன்றும் செயற்படத் தொடங்கிவிட்டன. இந்தநிலை, புலிகள் இயக்கத்தை தமிழ்த் தேசிய போராட்டத்தின் பிரதான புள்ளியாக்கியது. புலிகள் கோலொச்சிய காலம் முழுவதும், தமிழர் அரசியல் உரிமைப் போராட்டம் என்பது, இந்தியாவுக்கு அச்சுறுத்தலானது என்கிற எண்ணம் விஸ்தரிக்கப்பட்டது. அதைக் கடப்பது சார்ந்து, புலிகளும் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பில், புலிகள் மீது எழுந்த குற்றச்சாட்டுகள் அதனை இன்னும் மோசமாக்கியது. ஈழத் தமிழர் அரசியல் என்பதே, இந்தியாவுக்கு எதிரான ஒன்றாகக் கருதப்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் வழி, வெற்றிகரமான அடைவுகளைப் புலிகள் அடைந்த போதிலும், இராஜதந்திர ரீதியாக அவர்கள் போதிய வெற்றிகளைப் பெற முடியவில்லை.

மாறாக, மெல்ல மெல்ல அனைத்து நாடுகளிலும் இருந்து தனிமைப்படுத்தப்பட்டார்கள். அதனால், புலிகள் இயக்கத்தின் முடிவை, இலங்கை அரசோடு இணைந்து, சர்வதேச நாடுகளும் திட்டமிட்டு அரங்கேற்றின.

புலிகளின் முடிவு மாத்திரமல்ல, முள்ளிவாய்க்கால் இறுதி நாள்களில் இலட்சக்கணக்கான மக்கள், போர் முனைக்குள் சிக்குண்டிருந்த போதிலும், அவர்களை உயிர்ச் சேதங்கள் இன்றி மீட்டெடுப்பதற்கான இராஜதந்திர அணுகுமுறையோ அல்லது, வெளியுறவு தொடர்பாடல்களையோ ஈழத் தமிழர்களின் எந்தத் தரப்பும் போதியளவில் கொண்டிருக்கவில்லை. அதற்கு, தமிழ்த் தேசிய போராட்டங்களை, தமிழ்த் தலைமைகள் உணர்வு ரீதியாகக் கட்டமைத்து வளர்த்தது மாத்திரமே காரணமாகியது.

ஏனெனில், இராஜதந்திர மட்டங்களில் தமிழ்த் தேசிய அரசியல், நெளிவு சுழிவுகளை உள்வாங்கி, பெரும் பாய்ச்சலை எடுத்திருந்தால், முள்ளிவாய்க்கால் முடிவுகளை சிலவேளை தவிர்த்தும் இருக்கலாம்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான கடந்த 12 ஆண்டுகளிலும் கூட, அந்த நிலையில் பெரும் மாற்றங்கள் நிகழவில்லை. கூட்டமைப்பைத் தாண்டி, தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கும் எந்தத் தரப்பையும் சர்வதேச நாடுகள் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை.

தூதுவராலய மட்டச் சந்திப்புகள் அல்லது, இலங்கைக்குள் வரும் பிரதிநிதிகளைச் சந்திப்பதே அந்தத் தரப்புகளின் பெரிய சாதனையாகப் பார்க்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவை, கூட்டமைப்புக்கு மாற்றாகத் தங்களது அரசியலை முன்னெடுத்தாலும், அவர்களைப் பிரதான பேச்சுவார்த்தைத் தரப்புகளாக, சர்வதேச நாடுகள் கருதுவதில்லை.

அண்மைக்காலங்களில், கூட்டமைப்புக்குள் இருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ), கொழும்பிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து வருகின்றது. அதனை, பெரும் சாதனையாகவே அதன் முக்கியஸ்தர்கள் ஊடகங்களில் வெளிப்படுத்துகின்றார்கள்.

தமிழர் அரசியல் என்பது, தூதுவராலயங்களையும் அதன் பிரதிநிதிகளையும் சந்திப்பதால் மாத்திரம், வெற்றிகரமான அடைவுகளை நோக்கி நகர்ந்து விடலாம் போன்ற தோற்றப்பாடு பேணப்படுகின்றது. தூதுவராலயங்கள் ஒவ்வொரு நாடுகளினதும் ஒரு வாசல். அவை, அரசியல் கட்சிகளை மாத்திரமல்ல, தங்களுக்குத் தேவையான அனைத்துத் தரப்பினரையும் சந்திப்பதுண்டு. அவற்றில் அநேக சந்திப்புகள் வெளிப்படுத்தப்படுவதில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் ஆரம்பித்த காலம் முதல், தூதுவராலயங்களைத் தாண்டித் தன்னுடைய பாய்ச்சலை பெரிதாக எடுக்காததும், தீர்மானங்களை எடுக்கும் வெளித்தரப்புகளுடன் நெருக்கத்தைத் பேணாமையுமே பெரும் பின்னடைவுகளுக்கு காரணம்.

அதுபோல, இந்தியாவை மாத்திரம் திருப்திப்படுத்தும் வேலைத் திட்டத்தை மாத்திரம், இராஜதந்திர அணுகுமுறை அல்லது வெளியுறவுக் கொள்கை என்று தலையில் ஏற்றி வைக்காமல், சரியான புரிதலுடன் அதை அணுக வேண்டும். இல்லையென்றால், ஒரு சில வட்டங்களுக்குள் மாத்திரம் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவையோ, அமெரிக்காவையோ தூரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல இதன் அர்த்தம். மாறாக, அவர்களின் கருவிகளாக இருப்பதைத் தாண்டிய ஒரு தரப்பாகத் தன்னை நிலைநிறுத்துவதற்கு, தமிழ்த் தேசிய அரசியல் தன்னைத் தயார்படுத்த வேண்டும் என்பதே அர்த்தம். அந்தப் புள்ளியை நோக்கிய பயணத்தை, இனியாவது தமிழ்த் தேசிய தரப்புகள் ஆரம்பிக்க வேண்டும்.

## கடிதங்கள்

### ஒப்பந்தக் காலம் முடிவுற்றும்

## வேலைகள் முழுமையடையாத பாலங்கள்

முல்லைத்தீவு - பரந்தன் ஏ-35 வீதியில் புளியம்பொக்கணை சந்தி, உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு பாலங்களின் ஒப்பந்த காலம் நிறைவடைந்தபோதும், அதன் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாத நிலையில், போக்குவரத்துகளில் தொடர்ந்தும் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

ஏ-35 வீதியின் 12ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள முதலாவது பாலமும் 28ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள இரண்டாவது பாலமும் புனரமைப்புக்குத் தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைகள், வீதிகள் மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வீதியில், 28ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள பாலத்தின் ஒப்பந்தக்காலம் 2020 ஜூலை 21ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ள நிலையில், 12ஆவது கிலோ மீற்றர் பகுதியில் அமைந்துள்ள பாலத்தின் கட்டுமானப் பணிகள் 2021 நவம்பர் ஏழாம் திகதியுடன் நிறைவேற்றப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டாலும், இப்பாலத்தின் வேலைகள் மந்த கதியில் நடைபெறுகின்றன.

இவ்வாறு, ஏ-9 வீதிக்கு அடுத்தபடியாக அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட வீதியாகக் காணப்படும் மேற்படி வீதியில் இருக்கின்ற குறித்த பாலங்களை, விரைவாகப் புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்

பெருமைதரும் அரிய வரலாற்றுப் பணி: இன்று மாலை திறந்துவைக்கப்படுகிறது

# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்







பேராசிரியர்
ப. புஸ்பரட்ணம்

யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்ட ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணி, யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால், அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும் பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என்றவகையில், விசேட முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும் அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது, 'ஆரியகுளம்' என்ற பெயர் எவ்வாறு வந்தது? எப்போது வந்தது? எந்த மன்னன் காலத்துக்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துகளும் பல கேள்விகளும் மக்களிடமும் வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருகின்றன.

இந்த வரலாற்று மயக்கத்துக்கு 'ஆரியகுளம்' என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் 'ஆரிய(ர்)' என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு. திருமுருகன், அண்மையில் பொருத்தமான பதிலையும் விளக்கத்தையும் வழங்கி இருந்ததுடன், இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்துக்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும் விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, கி.பி 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு, அதன் சமகாலத்தில் தென்னிலங்கை மீதும் வடஇலங்கை மீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி, அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படை எடுப்புகளின் தளபதிகளாக இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள்; இவர்கள், 'சக்கரவர்த்திகள்' என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டத்தை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி, அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதை, பாண்டியர் காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன.

அவற்றுள், இலங்கைமீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்த அரச வம்சத்துக்கு உரியவர்கள்? எந்த மொழிக்கு உரியவர்கள் என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே, சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுகள் காணப்படுகின்றன.

'முன்பு பஞ்சம் ஒன்று நிலவியகாலத்திலே, பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள், ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு, அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யப்பகூவா) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும் விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு, பாண்டி நாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்'.

மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து, ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது, இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் 'ஆரியன்' என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், வடஇலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை, தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில், குடுமியாமலையிலுள்ள 1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும் வடஇலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும் சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில், வடஇலங்கை மீது பாண்டியர் படையெடுத்து, ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்துமாறு கோரியபோது, அதை அவன் ஏற்க மறுத்ததால், அவனைக் கொன்று, அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு, இந்த வெற்றியின் நினைவாகத் தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை, கோணாமலையிலும் திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது.

ஆயினும், இந்த வெற்றியைத் தொடர்ந்து, தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால், சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப் படைகளே, அவனை அகற்றிவிட்டு, கி.பி 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால், இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் 'ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு' என்றே அழைக்கப்படுகின்றது.

இதனால், யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள், ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு, தமது பெயருடன் 'ஆரியன்' என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு 'யாழ்ப்பாண வைபவமாலை'யில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம்.

மேலும், ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று, தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை 'பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இது மேலும், யாழ்ப்பாண வைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் 'ஆரியன்' என்ற சொல்லும் இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போத்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது.

இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி. பத்மநாதன், "இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு, யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம்" எனக் கூறியிருப்பதுடன், அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்ச்சி அடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

கி.பி 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'ராஜாவலிய' என்ற சிங்கள வரலாற்று இலக்கியம், சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக்குறிப்பிட்டு, அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைபலத்திலும் பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு, தாழ்நிலப்பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக, ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள், ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும் அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைத்துப் பேசப்படுவதுண்டு. இவ்வரலாற்று நினைவுகள், பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள், தமிழகத்தில் இராமநாதபுரம், செவ்விருக்கை நாட்டு ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் எனப் பாண்டிய சாசனங்களும் பிற வரலாற்று மூலங்களும் உறுதிசெய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததால், இவர்கள் 'சேதுகுலம்' எனவும் அழைக்கப்பட்டனர்.

இச்சேதுகுலத்தையும் சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள், தாம் வெளியிட்ட நாணயங்களிலும் கல்வெட்டுகளிலும் அரச கொடிகளிலும், சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும், யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

மேலும், ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக, பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரியநல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள், பரந்த பிரதேசத்துக்குரிய இடப்பெயர்களாக உள்ளன.

வரலாற்றுப் பழைமை வாய்ந்த இவ்விடப்பெயர்கள், தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை. அதிலும், யாழ்ப்பாணத்தில் உள்ள 'ஆரியகுளம்' என்ற அதே பெயர், தென்தமிழகத்தில் ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம், ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

1913ஆம் ஆண்டு 'ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்' என்ற நூலில், அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள், குணபூஸணசிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது, குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும் அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும், அந்த அமைச்சன், இம்மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்க்கட்டில் கோவில் அமைத்ததாகவும் கூறியுள்ளார்.

அண்மையில், நாயன்மாரக்கட்டு கோவில்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது, ஓர் அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு, அது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும், அக்கல்வெட்டில் இக்கோவில்த் திருக்குளத்தை அமைத்தவன், சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாதரங்களை வைத்துப் பார்க்கும் போது, 'ஆரியகுளம்' என்ற பெயர், யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு, வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது, அது சார்ந்த இனத்தின் பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துகளைச் சிறிதும் பிசகாமல், எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டும்; தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆரியகுளமீளுருவாக்கம் என்பது, எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்க முடியும் என்பதன் ஓர் அடையாளமாகவும் தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப்பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே, அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

---

தமிழகம்

சசிகலாவுக்கும் தினகரனுக்கும் இடையில்

# அதிகார மோதல்



சசிகலாவுக்கும் தினகரனுக்கும் இடையில் அதிகார மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. தினகரன் தெரிவித்த கருத்து, அவரது உண்மை முகத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது என குற்றஞ்சாட்டும் அவரது கட்சி நிர்வாகிகள், தங்கள் பதவியை ராஜினாமா செய்யத் தயாராகி வருகின்றனர்.

சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சமீபத்தில் நிவாரண உதவிகளை வழங்கினார் சசிகலா. இந்நிகழ்வில் சசிகலாவுடன் பங்கேற்ற சிலரை தினகரன் புறக்கணித்துள்ளார்.

இது சசிகலாவுக்குப் பிடிக்கவில்லை. இந்த நிலையில், அவர்கள் இருவர் மத்தியில் அதிகார மோதல் உருவாகி உள்ளது. சமீபத்தில், பேட்டியொன்றில் தினகரன், "அ.தி.மு.க பொதுச்செயலாளர் பதவிக்கு, சசிகலா உரிமை கொண்டாடுகிறார். இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது, அ.ம.மு. கவினர் பங்கேற்பது சட்டச் சிக்கலை உருவாக்கும் என்பதால், சசிகலாவுடன் செல்வதை எங்கள் நிர்வாகிகள் தவிர்த்திருக்கலாம்" என்றார். தினகரனின் இந்தப் பேட்டி சசிகலாவுக்கும் அ.ம.மு.க நிர்வாகிகளுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து, அ.ம.மு.க நிர்வாகிகள் கூறியதாவது:

வெள்ள நிவாரண உதவி செய்ய தினகரன் வரவில்லை; சசிகலா உதவிகளை வழங்கினார். அவருக்கு உதவியாக சென்ற அ.ம.மு.க நிர்வாகிகளிடம், தினகரன் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டது. சசிகலாவுக்கு ஆதரவாகச் செயற்படக் கூடாது என உத்தரவிட்டதையும் எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. இனி தினகரனை நம்பினால், நாங்கள் நட்டாற்றில் தள்ளப்படுவோம். டிசெம்பர் ஐந்தாம் திகதி ஜெயலலிதா நினைவு தினத்தன்று காலை 10 மணிக்கு தினகரனும்; 11 மணிக்கு சசிகலாவும் தனித்தனியாக அஞ்சலி செலுத்துகின்றனர். அதன்பின், நிர்வாகிகள், சசிகலாவுக்கு ஆதரவாக, தங்களது பதவிகளை ராஜினாமா செய்ய திட்டமிட்டு உள்ளனர்" என்றனர்.

---




கொப்பால்

# டிக்கெட் வாங்கி பயணித்த கோழி

கோழிக்கும் டிக்கெட் வாங்கி பயணிக்கும் நிலை அரசு பஸ்ஸில் விவசாயி ஒருவருக்கு ஏற்பட்டது.

கொப்பாலை சேர்ந்தவர் ராமப்பா, 45 வயதான விவசாயியான இவர், 28 ஆம் திகதி ஹைதராபாத்தில் இருந்து கொப்பால் கங்காவதிக்கு அரசு பஸ்ஸில் கோழியுடன் பயணித்தார். அப்போது டிரைவர், "கோழிக்கும் அரை டிக்கெட் வாங்க வேண்டும்" எனக் கூறியுள்ளார். அதன்படி, 463 ரூபாய் கொடுத்து கோழிக்கும் தனியாக டிக்கெட் பெற்று பயணித்தார்.

ஒரு கோழியின் விலை 300 ரூபாய் முதல் 400 ரூபாய்வரை மட்டுமே இருக்கும். ஆனால், 463 ரூபாய் கொடுத்து பயணித்துள்ள இந்தக் கோழி, சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து நடத்துநர் அனிஷ், " இது வழக்கமாக உள்ள நடைமுறைதான்" என்று கூறினார்.

---

சென்னை

சிவசங்கர் பாபாவின் இரகசிய அறை

# மும்முர சோதனை

சிவசங்கர் பாபாவின் இரகசிய அறையை சிபிசிஐடி பொலிஸார் மும்முரமாகச் சோதனைசெய்து வருகின்றனர்.

சென்னை அருகே சுசில்ஹரி என்ற சர்வதேச பள்ளியை நடத்தி வந்த சிவசங்கர் பாபா மீது, மாணவிகள் சிலர் பாலியல் புகார் அளித்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



இந்தச் சர்வதேச பள்ளியில் இரகசிய அறை ஒன்று இருப்பதாக அண்மையில் சிபிசிஐடி பொலிஸார் கண்டுபிடித்தனர். இதை அடுத்து அந்த அறையை திறந்து சோதனை செய்ய முடிவு செய்யப்பட்டது

இந்த நிலையில் சிறையில் உள்ள சிவசங்கர் பாபாவின் கைரேகை பதிவை எடுத்து சிவசங்கர் பாபாவின் இரகசிய அறை திறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டு வருகிறது.

சிபிசிஐடி பொலிஸார் அந்த இரகசிய அறையில் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருவதாகவும் அங்கு உள்ள ஆவணங்களை ஆய்வு செய்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

---

கிருஷ்ணகிரி

# விவசாயிகளை ஓடவைத்த மலைப்பாம்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அருகே உள்ள பெரிய சூலமலை கிராமத்தில், வயலில் பதுங்கியிருந்த மலைப்பாம்பு, விவசாயிகளை அலறியடித்து ஓடவைத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிவா என்பவரது வயலில் நெல் அறுவடைசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 20க்கும் மேற்பட்ட விவசாய பணியாட்களுக்கே இந்நிலை ஏற்பட்டது. 10 அடி நீளமான அந்த மலைப்பாம்பு நெற் பயிர்களுக்கு இடையே பதுங்கியிருந்ததைக் கண்ட தொழிலாளர்கள் அலறியடித்தபடி ஓடினர். தகவலறிந்து நிகழ்விடத்துக்குச் சென்ற வனத்துறையினர் பாம்பை லாவகமாகப் பிடித்து, பத்திரமாகக் கொண்டுசென்று வனப்பகுதியில் விட்டனர்.

அம்மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக யானை, காட்டெருமை உள்ளிட்ட வன விலங்குகள் கிராமங்களுக்குள் புகுந்து வீடு, விவசாயப் பயிர்களை சேதப்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை எதிர் மேற்கிந்தியத் தீவுகள் 2ஆவது டெஸ்ட்:

# முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே காலியில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

குறித்த போட்டியின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை ஒரு விக்கெட் இழப்புக்கு 69 ஓட்டங்களைப் பெற்றவாறு தமது முதலாவது இனிங்ஸில் ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், அணித்தலைவர் கிறெய்க் பிறத்வெய்ட், என்குருமாஹ் பொன்னரின் இணைப்பாட்டத்தின் மூலம் இனிங்ஸை நகர்த்தியது.




பின்னர் ரமேஷ் மெண்டிஸிடன் 35 ஓட்டங்களுடன் பொன்னர் வீழ்ந்ததோடு, குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் 72 ஓட்டங்களுடன் பிறத்வெய்ட்டும் லசித் எம்புல்தெனியவிடம் வீழ்ந்தார். பின்னர் றொஸ்டன் சேஸ், ஷே ஹோப், ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் சிறிது இடைவெளிகளில் மெண்டிஸிடம் வீழ்ந்தனர். அடுத்து வந்த கேமார் றோச்சும் சிறிது நேரத்திலேயே பிரவீன் ஜெயவிக்கிரமவிடம் வீழ்ந்தார்.

கைல் மேயர்ஸ், வீராசாமி பெருமாள் ஆகியோர் இனிங்ஸை நகர்த்திய நிலையில், எம்புல்தெனியவிடம் பெருமாள் வீழ்ந்ததுடன், ஜோமெல் வொரிக்கானும் உடனேயே மெண்டிஸிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 253 ஓட்டங்களையே மேற்கிந்தியத் தீவுகள் பெற்றது. மேயர்ஸ் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களுடன் காணப்பட்டார்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, ஒஷாத பெர்ணான்டோவை ரண் அவுட் மூலம் இழந்து நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் பதும் நிஸங்க 21, சரித் அஸலங்க நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

ஐ.பி.எல்:

## ஹர்ஷால், ஆவேஷ் தக்க வைக்கப்படவில்லை

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) அடுத்தாண்டு ஏலத்துக்கு முன்னதாக ஹர்ஷால் பட்டேல், ஆவேஷ் கான், ஷுப்மன் கில், இரவிச்சந்திரன் அஷ்வின், லோகேஷ் ராகுல், ரஷீட் கான், ஜொஃப்ரா ஆர்ச்சர், இஷன் கிஷன், ஷீகர் தவான், ஷ்ரேயாஸ் ஐயர், ஜொனி பெயார்ஸ்டோ, ககிஸோ றபாடா உள்ளிட்டோர் அவர்களின் அணிகளால் தக்க வைக்கப்படவில்லை.

இதேவேளை, மொஹமட் சிராஜ், உம்ரான் மலிக், அப்துல் சமட், வெங்கடேஷ் ஐயர், வருண் சக்கரவர்த்தி, பிறித்திவி ஷா, ருத்துராஜ் கைகவாட், அன்ட்ரே ரஸல், சுனில் நரைன் உள்ளிட்டோர் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஒவ்வோர் அணியாலும் தக்கவைக்கப்பட்ட வீரர்கள் பின்வருமாறு: அடைப்புக்குறிக்குள் அவர்களின் ஊதியங்களின் ஒரு கோடி இந்திய ரூபாயின் மடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ்: இரவீந்திர ஜடேஜா (16), மகேந்திர சிங் டோணி (12), மொயின் அலி (8), ருத்துராஜ் கைகவாட் (6)

டெல்லி கப்பிட்டல்ஸ்: றிஷப் பண்ட் (16), அக்ஸர் பட்டேல் (9), பிறித்திவி ஷா (7.5), அன்றிச் நொர்ட்ஜே (6.5)

கொல்கத்தா நைட் றைடர்ஸ்: அன்ட்ரே ரஸல் (12), வெங்கடேஷ் ஐயர் (8), வருண் சக்கரவர்த்தி (8), சுனில் நரைன் (6)

மும்பை இந்தியன்ஸ்: றோஹித் ஷர்மா (16), ஜஸ்பிரிட் பும்ரா (12), சூரியகுமார் யாதவ் (8), கெரான் பொலார்ட் (6)

பஞ்சாப் கிங்ஸ்: மாயங்க் அகர்வால் (12), அர்ஷ்டீப் சிங்க் (4)

ராஜஸ்தான் றோயல்ஸ்: சஞ்சு சாம்ஸன் (14), ஜொஸ் பட்லர் (10), யஷஸ்வி ஜைஸ்வால் (4)

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்: விராட் கோலி (15), கிளென் மக்ஸ்வெல் (11), மொஹமட் சிராஜ் (7)

சண்றைசர்ஸ் ஹைதரபாத்: கேன் வில்லியம்ஸன் (14), உம்ரான் மலிக் (4), அப்துல் சமட் (4)





மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில்

## 10,000 மீற்றரில் எம்.ஜே.அஜித் அக்ரம் முதலிடம்

எம்.என்.எம். அப்ராஸ்

அம்பாறை மாவட்ட இளைஞர் கழக சம்மேளத்தால் அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ரீதியில் இடம்பெற்ற 20வது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், 10,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் கலந்து கொண்டு முதலாமிடத்தை நற்பிட்டிமுனை ஹீரோ இளைஞர் சேவை கழகத்தின் மூலம் கலந்து கொண்ட எம்.ஜே. அஜித் அக்ரம் என்பவர் தனதாக்கிக் கொண்டார்.

இதன் மூலம் இவர் தேசிய ரீதியில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டியில் பங்கு கொள்ளத் தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவரது சகோதரர் எம்.ஜே. சஜித் அஸ்லம் என்பவர் 1,500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

குறித்த இருவரின் வெற்றியின் மூலம், நற்பிட்டிமுனை ஹீரோ இளைஞர் சேவை கழகத்துக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துக் கொண்டனர்.

## யங் ஸ்டாருக்கு புத்தளம் உள்ளக அரங்கம்

எம்.யூ.எம். சனூன்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் நடத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தளம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கடையாமோட்டையைச் சேர்ந்த யங் ஸ்டார் கழகம் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

புத்தளம் நகர சபைத் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக், குறித்த அணியினருக்கான மைதானத்தின் தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டும், வீரர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டும் புத்தளம் மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கை, அவர்களின் பயிற்சிக்காக இலவசமாக வழங்கியுள்ளார்.

சர்வதேச மட்டத்திலான கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் இல்யாஸ் மரைக்கார் குறித்த அணியின் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

ரபீக், விளையாட்டரங்குக்கு விஜயம் செய்து வீரர்களின் பயிற்சி நடவடிக்கைகளைப் பார்வையிட்டதோடு, விரைவில் நடைபெறவிருக்கும் எஞ்சிய போட்டிகளிலும் வென்று, சம்பியன் பட்டத்தை சுவீகரிப்பதற்காக வீரர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அமெரிக்கா

பாடசாலையில் துப்பாக்கிச் சூடு

## 3 மாணவர்கள் பலி




அமெரிக்காவில் பாடசாலையொன்றில் 15 வயதான மாணவனொருவன் கடந்த 30 ஆம் திகதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சக மாணவர்கள் மூவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகரத்திற்கு அருகில் இருக்கும் உயர் நிலைப் பாடசாலையொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவத்தின் போது ஆசிரியர் உட்பட 6 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய மாணவனைக் கைது செய்துள்ள பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

## பாராளுமன்றத்தில் பெண்களுக்கு பாலியல் தொல்லை



அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் பணியாற்றும் பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு முகம்கொடுப்பதாகவும் இதனால் பெண் எம்.பிக்களின் நிலை, ஆபத்தில் இருப்பதாகவும் அந்நாட்டின் பாலியல் வன்கொடுமை தடுப்பு ஆணையாளர் கேட் ஜென்கின்ஸ் தெரிவித்துள்ள கருத்து உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அந்நாட்டின் பிரதமர் ஸ்கொட் மோரிசன், "இச்செய்தியானது வருத்தத்தை அளிக்கின்றது" என்றார்.

அடுத்தாண்டு ஜூன் மாதத்திற்கு முன்பாக, அவுஸ்திரேலியாவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நெருக்கடி, பிரதமர் மோரிசனுக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா

## 'ஒமிக்ரான்' ஆபத்தானது



"ஒமிக்ரான் மிகவும் ஆபத்தானது" என Moderna தடுப்பூசி நிறுவனத் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் பன்செல் எச்சரித்துள்ளார்.

கடந்த வாரம் தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒமிக்ரோன் வகை கொரோனாத் தொற்றுக் குறித்து, பிரபல ஊடகமொன்றிற்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "டெல்டா வகை கொரோனாவை விட, ஒமிக்ரோன் வகை மிகவும் ஆபத்தானது. டெல்டா வகை கொரோனாவிற்கு எதிராகத் திறம்பட செயற்பட்ட தடுப்பூசிகளால் ஒமிக்ரோன் வகை கொரோனாவை எதிர்த்து, அதே ஆற்றலுடன் செயலாற்ற முடியாது" என்றார்

பார்படாஸ்

## தனி நாடாக மாறிய தீவு

கரீபியன் கடலில் மேற்கு இந்தியத் தீவுப் பிராந்தியத்தில் அமைந்துள்ள பார்படோஸ் (Barbados) தீவானது, பிரித்தானிய அரசியின் ஆளுகையிலிருந்து விலகி, புதிய குடியரசு நாடாக அறிவித்துள்ளது.

இத்தீவானது கடந்தாண்டு பிரித்தானியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சுய அதிகாரம் பெற்ற குடியரசு நாடாக மாற வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2018ஆம் ஆண்டில் பார்படாஸ் தீவின் ஆளுநராக இருந்த டேம் சான்றோ, அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

இதுகுறித்து, இரண்டாம் எலிசபெத் ராணி "எதிர்வரும் ஆண்டுகளில், பார்படாஸ் தீவு செழிப்புடனும் மகிழ்ச்சி மற்றும் அமைதியுடனும் இருக்க வேண்டும்" என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



கொங்கோ



புலம்பெயர்ந்தோர் முகாம் மீது தாக்குதல்

## 22 பேர் உயிரிழப்பு

கொங்கோவில் புலம்பெயர்ந்த மக்கள் வசித்த முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் நீண்ட காலமாக உள்நாட்டுப்போர் இடம்பெற்று வருகின்றது.

இதன் காரணமாக மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, முகாம்களில் வசித்து வருகிறார்கள்.

இந்நிலையில், கொங்கோவின் இவோ என்னும் நகரத்தில் வசித்து வந்த புலம்பெயர்ந்த மக்களின் முகாம்களின் மீது, கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"நீண்டகால உள்நாட்டுப்போர் காரணமாக, மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, முகாம்களில் வசித்து வருகிறார்கள். இந்நிலையில், அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது**

இத்தாக்குதலுக்கு அந்நாட்டில் இயங்கிவரும் , 'கொங்கோ வளர்ச்சிக்கான கூட்டுறவு' என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## டுவிட்டர் நிறுவனம் அதிரடி முடிவு

கடந்த 30 ஆம் திகதி டுவிட்டர் இணையதளத்தில் புதிய தலைமை செயற்பாட்டு அதிகாரியாக இந்தியாவை சேர்ந்த பாரக் அக்ரவால் என்பவர் பதவியேற்றார்.



இந்நிலையில், அவர் பதவியேற்ற முதல் நாளே அதிரடியான அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிவிப்பில், "தனிப்பட்ட நபர்களின் புகைப்படம், வீடியோக்களை அவர்களுடைய அனுமதி இன்றி பதிவு செய்யக் கூடாது. அவ்வாறு பதிவு செய்யும் டுவிட்டர் கணக்குகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிபந்தனையை விதிக்க வேண்டுமென, ஏற்கெனவே அவர் வலியுறுத்தி வந்த நிலையில், தற்போது பதவி ஏற்றவுடன் முதல் நடவடிக்கையாக இதனை அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.